செய்தி வெளியீடு எண் – 489 நாள்– 4.8.2007

## பத்திரிக்கை செய்தி

# பறக்கும் படை தனி வட்டாட்சியர்களுக்கு ரூ.68.85 லட்சம் செலவில் 16 ஜீப்புகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்

* * * * * * * *

தமிழக அரசு மான்ய விலையில் பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கும் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மண்ணெண்ணெய், கோதுமை ஆகியவற்றினை கடத்தல் செய்வதை தடுக்க மாவட்டம் தோறும் பறக்கும்படைகள் அமைக்கப்பட்டு அவை செயல்பட்டு வருகின்றன. இப்பணிகளை மேலும் நல்ல முறையில் செயல்படுத்தவும், கடத்தல் செய்யப்படுவதை தடுத்தும், கடத்தல் செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தல் செய்யப்படுவதை கைப்பற்றுவதற்காகவும், அனைத்து மாவட்ட பறக்கும் படை தனி வட்டாட்சியர்களுக்கு ஜீப்புகள் வழங்கப்படுகின்றன. அதன்படி, தற்போது திருவள்ளூர், வேலுார், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், திருச்சி, திருவாரூர், நாகப்பட்டினம், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், துாத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 16 மாவட்டங்களுக்கு மொத்தம் ரூ.68,84,816/– செலவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இன்று (4.8.2007) வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின்போது மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலர், திரு.S.மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்கள், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர், திரு.L.N.விஜயராகவன், இ.ஆ.ப., அவர்கள் துணை ஆணையர்II, திரு.D.சிவலிங்கம், துணை ஆணையர்(வடக்கு) திருமதி.M.லஷ்மி, மற்றும் துணை ஆணையர்(தெற்கு) திருமதி. S.கங்காபாய் ஆகியோர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 9.